மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக்காட்சி அமைத்தல்.

59— (*வினா எண். 104) **திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஒலி, ஒளிக்காட்சி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாமல்லபுரத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஒலி— ஒளிக்காட்சி அமைக்கும் திட்டம் அரசின் சஆய்வில் உள்ளது.

(ஆ) இந்த ஒலி - ஒளிக்காட்சி ரூ. 47 லட்சம் மூலதன செலவில் அமைக்க 1988-ல் மாநில அரசு ஆணை பிறப்பித்தது என்றாலும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை Department of Archaeology, Government of India எழுப்பிய ஆட்சேபணையினால் இத்திட்டத்தில் தாமதம் ஏற்பட்டது.

திரு. வி. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அங்கு ஒலி - ஒளிக்காட்சி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகளும் துவக்கப்பட்டதாக நான் அறிகிறேன். அது எந்த அளவிற்குத் தடைபட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலே மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில் ' Shore Temple ' என்று சொல்லப்படுகின்ற கடற்கரைக் கோயில் அருகாமையில் அல்லது 5 ரதங்கள் இருக்கின்ற இடத்திலே இந்த ஒலி - ஒளிக்காட்சியை அமைக்கலாம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் மத்திய அரசு சுற்றுலாத்துறை இத்திட்டம் பற்றி இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையுடன் கலந்தாலோசித்தது. அங்கே இந்த இரண்டு இடங்களும்— கடற்கரை கோயில், ஐந்து ரதங்கள்—இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தாலே அவர்கள் அதை புரொடெக்ட்ட் ஏரியா என்று அழைக்கிறார்கள். ஆகவே அந்த இடங்களிலே ஒலியும் - ஒளியும் காட்சியை அமைக்கக்கூடாது என்று

1989 ஏப்ரல் 10]

ஆட்சேபணை கிளப்பியதன் காரணமாக அந்தத் திட்டத்திலே தாமதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு மாநில அரசு மாற்று ஏற்பாடாக அங்கே அமைக்கப்பட இருக்கிற அரும்பொருள் காட்சியகம், யூத் ஹாஸ்டல் அருகிலே ஏறத்தாழ 30 ஏக்கா நிலத்திலே அமைக்கலாம் என்று திட்டம் இருக்கிறது. அது நிறைவேற்றப்படுகிறபோது அங்கே இந்த ஒலி - ஒளிக் காட்சியை அமைக்கலாம் என்று ஒரு கருத்து ஆய்வில் இருக்கிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தைத் துல்லியமாக அளந்து அங்கே இருக்கிற நிலைமைகளை வெகு அழகாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு ஏற்பட்டிருக்கிற தடைகளை உடனடியாக அகற்றி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையில் ஒலி - ஒளிக் காட்சியை கூடிய சீக்கிரத்தில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த ஒலி— ஒளிக் காட்சி அமைப்பதன் மூலமாக அங்கே வருகிற பயணிகளுக்குத் தேவையான விவரங்களை எடுத்துச் சொல்ல முடியும். அந்தப் பகுதியைப் பற்றி மட்டுமல்ல, தமிழகத்தைப் பற்றி சொல்ல முடியும். ஆனால் இதன் மூலமாக வருகிற வருவாயைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒலி - ஒளி நிகழ்ச்சியைக் காண வருகிறவர்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், அந்தத் திட்டம் இறுதியில் அவசியம் தானா என்ற ஆய்வு இன்னும் தீவிரமாகச் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகவும், சரித்திர சம்பவம் நடைபெற்ற இடங்களாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களி இந்த ஒலி - ஒளிக் காட்சியை விரிவு படுத்திட அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மதுரையில் இப்படிப்பட்ட ஒலி - ஒளிக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கேயும்கூட ஆரம்ப காலத்திலே வந்து பார்த்தவர்களுடைய எண்ணிக்கையைவிட இப்போது அங்கே வந்து பார்க்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைந்து இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அதுவும் தவிர அந்தக் கருவிகளிலே சில பழுது ஏற்பட்ட காரணத்தினால் ஒரு மணி நேரம் காட்டப்படுகிற காட்சி இப்போது 40 நிமிடம்தான் காட்டப்படுகிறது. இப்போது மாமல்லபுரத்திலே இதை அமைக்கலாம் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது. இது தவிர வேறு எங்காவது அமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் ஆலோசனை தெரிவித்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1989 ஏப்ரல் 19

திரு. வெ. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதியில் விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த சித்தன்னவாசல் மிகவும் வரலாற்று சிறப்பு மிகுந்த சுற்றுலா மையமாக இருக்கிறது. மேலும் விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த கொடும்பாளூரில் மூவர் கோயிலும் வரலாற்று சிறப்பு மிக்க சுற்றுலா மையமாக இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் மேலும் விஸ்தரிப்பு செய்து, அங்கே ஒலி - ஒளிக்காட்சி அமைக்கபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாட்டிலேயிருந்து வருகிற பயணிகள் ஒலி - ஒளிக் காட்சிகளைப் பார்ப்பதில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. சுற்றிச் சுற்றி வெவ்வேறு இடங்களை நடந்து போய்ப் பார்ப்பதிலேதான் அவர்களுக்கு அதிக ஆர்வம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பகல் நேரத்திலே அந்தக் கட்டிடங்களை, அந்தச் சிற்பங்களை நேரிலே பார்ப்பதிலேதான் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது. மேல் நாட்டிலே இருப்பதைப் போல ஒலி - ஒளிக் காட்சிகளைப் பார்ப்பதிலே தீவிரமான ஆர்வம் இல்லை என்பதும் அதற்காக அவர்கள் நேரம் செலவிட முன் வருவதில்லை என்பதும் இன்றைக்கு இருக்கிற நிலைமை ஆகும்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது மதுரையிலே இது நடைபெற்று வருகிறது, மாமல்லபுரத்திலே ஆய்வில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வேறு இடங்களில் இது பற்றி சொன்னாலும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். கன்னியாகுமரியில் அது ஒரு சர்வதேச சுற்றுலா மையம் என்ற அளவிலே இருக்கின்ற காரணத்தினாலே அங்கே அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, சிற்பங்களை எல்லாம் சுற்றி பார்ப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால் மாலையிலே அவர்கள் தங்கியிருந்து அடுத்த நாள் காலையிலே சூரிய உதயம் பார்ப்பதற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தங்குகின்ற காரணத்தினாலே— அவர்களுக்கு இரவு நேரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரிக்கு வருகின்ற பயணிகள் காலையிலே வந்து விட்டு மாலையிலே திருவனந்தபுரத்தின் அருகிலே இருக்கின்ற கோவளம் என்ற இடத்திற்குச் செல்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. இரவிலே வெளிநாட்டுப் பயணிகள் அங்கே அதிகமாக தங்கக்கூடிய வசதிகள் இல்லை. ஆகவே அதற்கான வசதிகளை முதலில் உருவாக்கித்தர வேண்டும். அதற்குப்பிறகு இந்த யோசனை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.